**2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி திங்கட்கிழமை மாலை 05.00 மணிக்கு**
**கொமாரபாளையம் நகராட்சி சாதாரணக்கூட்டத்தின்**
**நிகழ்ச்சி நிரல்**
**முன்னிலை:– திரு.சி.ஸ்டான்லி பாபு, இ.கலை., அவர்கள்.**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்**

---

**பொருள் எண்.1**

ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 296 நாள் 31.08.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 297 நாள் 31.08.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையம் வட்டம் கொமாரபாளையம் நகராட்சி, கொமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம், வார்டு - பி, பிளாக் - 45, நகரளவை எண். 6/14ல் 0.55 ஏக்கர் பரப்பு கொண்ட இடத்தில் உத்தேச மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திருமதி.வி.சரஸ்வதி, க/பெ.விஸ்வநாதன் என்பவர் மனு செய்ததை இவ்வலுலக கடிதம் ந.க.எண்.3210 /2019/எப்1 நாள்.03.10.2019 வாயிலாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேச பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4276/2019/சேம.3 நாள். 10.01.2020 இல் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கப்படவுள்ளது எனவும், மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைத்து ஏற்றுக் கொண்டதற்கான உள்ளாட்சி தீர்மானம், மற்றும் சாலைகள் தரமாக அமைக்கப்பட்டுள்ளதா என உதவி பொறியாளர் அவர்களின் சாலைச் சான்று, மின் கம்பம் அமைக்கப்பட்டு பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு மற்றும் மின்சாரம் வாரியத்திற்கும் ஒப்படைக்கப்பட்டு தானசாசனம் பத்திரம் ஆகிய விபரங்களுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் 07.08.2020 ஆம் தேதியிட்ட குறிப்பில் மேற்காண் மனைப்பிரிவில் தார் சாலை மற்றும் வடிகால் வசதி நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும், மனைப்பிரிவில் குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கான தொகை ரூ.27000/- மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான தொகை ரூ.48000/- ஆகிய இரண்டு தொகைகளும் நகராட்சி கருவூலத்தில் இரசீது

எண்.050/01/1/20-21/0003041 நாள்.30.06.2020 தேதியில் செலுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்கள்.

மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவு அமைக்க வேண்டி திருமதி.வி.சரஸ்வதி க/பெ.விஸ்வநாதன் என்பவர் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள சாலையின் பரப்பு : 830.88 சதுர மீட்டர் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் 7.31 சதுர மீட்டர் ஆகிய இரண்டு இடங்களையும் கொமாரபாளையம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 3332/2020 நாள்.07.07.2020ம் தேதியில் கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் பெயரில் தானசாசனம் பதிவு செய்து அசல் பத்திரம் ஒப்படைத்துள்ளார். மேலும் (TANGEDCO) மின் பகிர்மான மேற்பார்வை பொறியாளர் அவர்களின் பெயரில் 7.31 சதுர மீட்டர் கொமாரபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 3428/2020 நாள்.10.07.2020ல் தானசாசனம் பத்திரம், பதிவு செய்த நகல் இணைத்து அனுப்பியுள்ளார்.

மேற்படி சாலைகள் ( மூலை, முடுக்கு உட்பட்ட ), பொது ஒதுக்கீட்டிற்கான இடம் மற்றும் மின் பகிர்மானத்திற்கான ஒதுக்கப்பட்ட இடம் ஆகியவற்றை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொள்ளவும், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, நாமக்கல் அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மனைப்பிரிவு ஒப்புதல் நாமக்கல் நகர் ஊரமைப்பு துறையிடம் இருந்து வரப்பெற்ற பின் இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண் 298 நாள் 31.08.2020**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.4</u>**

நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையம் வட்டம் கொமாரபாளையம் நகராட்சி, கொமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம், வார்டு - பி, பிளாக் - 46, நகரளவை எண். 32/2இல் 0.28 ஏக்கர் பரப்பு கொண்ட இடத்தில் உத்தேச மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி திரு.வி.வருண்குமார், த/பெ.விஸ்வநாதன் என்பவரின் 03.09.2019ஆம் தேதிய மனு செய்ததை இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 3208/2019 நாள். 03.10.2019ன் வாயிலாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் , சேலம் அவர்களுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேச மனை உட்பிரிவு பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4278/2019/சேம.3 நாள். 10.01.2020 இல் மனை உட்பிரிவு ஒப்புதல் வழங்கப்படவுள்ளது எனவும், மனை உட்பிரிவில் அமையும் சாலை மற்றும் மூலை முடுக்குகளை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைத்து ஏற்றுக் கொண்டதற்கான உள்ளாட்சி தீர்மானம் , தான விபரம் ஆவணத்துடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலைகள் தரமாக அமைக்கப்பட்டுள்ளதா என உதவி பொறியாளர் அவர்களின் சாலைச் சான்று, Road Photo, EC, மின் கம்பம் அமைக்கப்பட்டு ஆகிய விபரங்கள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் 07.08.2020 ஆம் தேதியிட்ட குறிப்பில் மேற்காண் மனைப்பிரிவில் தார் சாலை மற்றும் வடிகால் வசதி நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும், மனைப்பிரிவில் குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கான தொகை ரூ.15000/- மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான தொகை ரூ.24000/- ஆகிய இரண்டு தொகைகளும் நகராட்சி கருவூலத்தில் இரசீது எண்.050/01/1/20-21/0003042 நாள்.30.06.2020ம் தேதியில் செலுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்கள்.

மேற்கண்ட உத்தேச மனை உட்பிரிவு அமையும் சாலையின் பரப்பு 346.26 சதுர மீட்டர் கொண்ட இடத்தை கொமாரபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3331/2020 நாள்.07.07.2020ஆம் நாளில் கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் பெயரில் தானசாசனம் மூலம் பதிவு செய்து அசல் பத்திரத்துடன் ஒப்படைப்பு செய்துள்ளார்.

மேற்படி சாலைகள் (மூலை, முடுக்கு உட்பட்ட) இடங்களை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொள்ளவும், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க வேண்டியும் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை , நாமக்கல் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மனைப்பிரிவு ஒப்புதல் நாமக்கல் நகர் ஊரமைப்பு துறையிடம் இருந்து வரப்பெற்ற பின் இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 299 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.5</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் 33 வார்டுகளில் 432 தெருக்கள் உள்ளன. இந்நகராட்சியில் தற்போது 76120 பேர் வசித்து வருகின்றனர். இந்நகராட்சியில் கடந்த மார்ச் மாதம் முதல் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு நகராட்சி பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றின் ஒரு பகுதியாக பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் பொருட்டு கபசுர குடிநீர் காய்ச்சி வார்டுகளில் பல்வேறு காலகட்டங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வந்ததால், வைரஸ் நோயின் தாக்கம் குறைந்து இருந்து வந்தது. மேற்படி கபசுர குடிநீர் பவுடர் இருப்பின் அளவு குறைவாக உள்ளதாலும் தற்போது நகரின் அனைத்து பகுதிகளிலும் கொரோனா வைரஸ் பரவல் அதிகமாக உள்ளதாலும் நோயின் தாக்கத்தை தவிர்க்கும்பொருட்டு பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கப்படவேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி கூடுதலாக சுமார் 300 கிலோ தேவையாக உள்ளது. எனவே மேற்படி, கபசுர குடிநீர் பவுடரை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் TAMPCOL சென்னை மூலம் வாங்கிக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ.3,00,000 க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி பொதுமக்களின் சுகாதாரநலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு நிறுவனமான Tamilnadu Medicinal Plant Farms & Herbal Medicine Corporation Limited (TAMPCOL) என்ற நிறுவனத்திலிருந்து 300 கிலோ அளவு கபசுரகுடிநீர் சூரணம் வாங்கிக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 300 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.6</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் 14 – வது நிதிக்குழு (CFC) 2019-2020 ன்கீழ் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சாலை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் விளம்பரம் செய்த வகையில் விளம்பர கட்டணத்தொகை ரூ.2626/- ஐ செலுத்த வேண்டும் என Mark Media Communications Chennai என்ற நிறுவனத்தாரின் பட்டியல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விளம்பர கட்டணத் தொகை ரூ.2626/- ஐ வழங்கியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இன்று வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 301 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்.18, K.O.N தியேட்டர் பேருந்து நிலையத்தின் கீழ் பகுதியில் (பாலம் அருகில்) புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இதில் ஆழ்துளை கிணற்றில் இருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் சப்ளை செய்ய இளநிலை மின்பொறியாளர் இ&ப தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தெற்கு பிரிவு என்பவருக்கு விண்ணப்பிக்கப்பட்டதில் கேட்பு தொகை ரூ.7500/- ஐ செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த தனி அலுவலரின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையினை செலுத்தியமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 302 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN 34 X0576 வாகனமானது 1,07,000 கி.மீ வரை ஓடியுள்ளதால் வாகனத்தை தற்போது இயக்க சிரமமாக இருப்பதாகவும் என்ஜின் மற்றும் கியர்பாக்ஸ் ஆகியவை புதியது மாற்றவும் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரிசெய்து தருமாறும் இந்நகராட்சி ஓட்டுநர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரிசெய்யவும் அதற்கு தேவையான பாகங்களை புதியது மாற்றி கொடுக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/- தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. தற்போது Covid – 19 நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள முழு ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் மேற்படி வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தாரிடம்விட்டு சரி செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாகனத்தை உள்ளூர் நிறுவனத்தாரிடம் விட்டு விலைப்புள்ளி பெற்று சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை மேற்கொண்டமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 303 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.9</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கடந்த மார்ச் மாதம் முதல் Covid–19 எனும் கொரோனா வைரஸ் தொற்று உலகின் அனைத்து பகுதிகளிலும் வேகமாக பரவி பொது மக்களின் உயிருக்கு மிகவும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இந்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில், எந்தெந்த பகுதிகளில் மக்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படுகிறார்களோ அந்தப் பகுதியினை தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவித்து, அப்பகுதியில் உள்ள சாலையின் நுழைவுப் பகுதி மற்றும் கடைசி பகுதி இரண்டையும், தகர ஷீட் மற்றும் அட்டைகளை கொண்டு மக்கள் யாரும் உள்ளே நுழையாதபடியும், உள்ளிருந்து யாரும் வெளியே பராத வகையிலும் தடுப்புகளை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. எனவே, இதன் காரணமாக கொரோனா தொற்று பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் தேவைக்கேற்ப தகர ஷீட் மற்றும் அட்டைகளை கொண்டு தடுப்புகள் அமைக்க நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவி 15–ன்கீழ் பணியின் அவசரம் அவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.5,50,000/–க்கு அனுமதித்து, கீழ்காணும் விபரப்படிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினம் வழங்கியதையும் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் / முகவரி | ஒரு சதுர மீட்டருக்கு தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | திரு.எம்.அப்புசாமி, பவானி. | ரூ.229/– |
| 2. | M/s.எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன், பவானி. | ரூ.235/– |
| 5. | திரு.கே.எஸ்.மாரியப்பன், காடப்பநல்லூர். | ரூ.238/– |

அலுவலக குறிப்பு

1. உத்தேச செலவினம் ரூ.5,50,000/–க்கு அனுமதி வழங்கலாம்.
2. மேலும், பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.எம்.அப்புசாமி என்பவரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு எண்.15ன் கீழ் அனுமதித்து முதற்கட்டமாக செலவினம் தொகை ரூ.3,59,963/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 304 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.10</u>**

கொமாரபாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து கணினிகளுக்கும் இணையதள வசதியானது ( Broad Band connection மற்றும் Internal Service Provider) பாரத் சஞ்சார் நிகாம் லிமிட்டெட், கொமாரபாளையம் கிளை என்ற நிறுவனத்தார் மூலம் இணைப்புகள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் தற்போது இணையதள இணைப்பானது சில நேரங்களில் துண்டிக்கப்பட்டு மீண்டும் இணைப்பு பெற காலதாமதம் ஆகிறது. இதனால் அலுவலகத்தில் உள்ள முக்கிய கோப்புகள் தொடர்பான அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப முடியாத நிலையில் பணிகள் பாதிக்கப்படுவதால் கணினி உதவி திட்ட அமைப்பாளர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே

மேற்கண்ட இணையதள இணைப்பிற்கு பதிலாக தனியார் துறை மூலம் இணையதள இணைப்பினை பெற மேற்படி ஏர்டெல் நிறுவனத்தாரின் Broad Band connection FTTH இணைப்பு பெறுவதற்கான செலவினத் தொகை ரூ.5000/- க்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. இந்நகராட்சியின் அலுவலக பணிகளை கருத்தில் கொண்டும், இணையதள இணைப்பின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, உள்ளூர் நிறுவனமான கொமாரபாளையம் கிளை ஏர்டெல் நிறுவனத்தாரின் இணைப்பான Braod Band connection static – I FTTH இணைப்பினை உடனடியாக பெற்றமைக்கும் அதற்காகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 305 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.11</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 19553/IHSDP -3/ 2015 நாள்.15.06.2020 இன்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அறிவுரைப்படியும், கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் B.E ( Civil ) படித்து முடித்த பட்டதாரிகளுக்கு Internship பயிற்சி வழங்க வேண்டும் எனவும், அதனை இந்நகராட்சியில் உள்ள மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தினசரி நாளிதழ்களில் விளம்பரப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தகவலினை அனைத்து மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில் , தினசரி நாளிதழ்களான தினமலர், தினத்தந்தி, காாலகதிர், தினமணி, தினகரன் ஆகியவற்றில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டண உத்தேசத் தொகை ரூ.50000/- க்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி விளம்பரத்திற்கான கட்டணத் தொகையினை வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 306 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.12</u>**

இந்நகராட்சி பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த புதைவட மின் பாதை அமைப்பதற்கு நகராட்சி மூலம் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் அதற்கான சாலை பராமரிப்பு கட்டணம் செலுத்தியுள்ளார்கள். தற்போது HT / LT புதைவடம் அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் பொது மக்கள் இலகு ரக வாகனம் மற்றும் கன ரக வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மூன்றாம் கட்டமாக தார் சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகள் பகுதியில் முழுமையாக புதைவடம் முடிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.24,90,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.24,90,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 307 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் அறை, நகராட்சி பொறியாளர் அறை, பொதுப் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் கணினி வசூல் மையம் ஆகியவற்றை நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள கண்காணிப்பு கேமிரா அடிக்கடி பழுது ஏற்பட்டு சரியான முறையில் பதிவு செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால், அலுவலகத்தின் நடவடிக்கைகளை கண்காணிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள கண்காணிப்பு கேமிராவினை பழுது சரி செய்து அம்மா உணவகத்திற்கு மாற்றி பொருத்தவும், அலுவலக நடவடிக்கைகளை சீராக கண்காணிக்க நகராட்சி அலுவலகத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் புதியதாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கண்காணிப்பு கேமிரா, கேபிள் மற்றும் அதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் பொருத்த தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8,10,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.8,10,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 308 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் TN-34 R-1914-ற்கு ஓட்டுநர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்படாமல் உள்ளதாலும், பொது சுகாதாரப் பிரிவில் தினசரி சேகரம் செய்யும் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணிக்கும் பிற பணிகளுக்கும் JCB வாகனம் தேவைப்படுவதால், மேற்படி வாகனத்தினை இயக்குவதற்கு ஒப்பந்ததாரர் மூலம் JCB வாகன ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒருவரை சப்ளை செய்யும் பணியினை ஆறு மாதத்திற்கு (01.10.2020 முதல் 30.09.2021 வரையிலான காலத்திற்கு) ஒருவரை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.2,06,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,06,000/—க்கு அனுமதி வழங்கலாம். மேலும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 309 நாள் 31.08.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

இந்நகராட்சி பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த புதைவட மின் பாதை அமைப்பதற்கு நகராட்சி மூலம் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் அதற்கான சாலை பராமரிப்பு கட்டணம் செலுத்தியுள்ளார்கள். தற்போது HT / LT புதைவடம் அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் பொது மக்கள் இலகு ரக வாகனம் மற்றும் கன ரக வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, நான்காம் கட்டமாக தார் சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகள் பகுதியில் முழுமையாக புதைவடம் முடிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.24,30,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.24,30,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 310 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

கொமாரபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக 6 மினி ஆட்டோக்கள் பயன்பாட்டில் உள்ளது. இவ்வாகனங்கள் மூலம் வீடுகளில் இருந்து குப்பைகள் பெறப்பட்டு வருவதாலும், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் ஆற்றங்கரையோர மக்களை எச்சரிக்கவும், தற்போது கொரோனா தொற்று அதிகம் உள்ளதால், அது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மேற்சொன்ன 6 வாகனங்களில் ஒலி பெருக்கி வசதிகள் செய்திட ஆகும் செலவினம் ரூ.80,000/—ஐ நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவி 15ன்கீழ் பணியின் அவசரம் அவசியம் கருதி, கீழ்காணும் விபரப்படிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினம் வழங்கியதையும் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் / முகவரி | ஒரு வாகனத்திற்கு தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். குமார் சவுண்ட் சிஸ்டம், கொமாரபாளையம். | ரூ.12,100/— |
| 2. | திருவாளர்கள்.ஸ்ரீஅய்யனாரப்பன், கொமாரபாளையம். | ரூ.12,700/— |
| 5. | திருவாளர்கள்.திருமகள் எலக்ட்ரிகல் அன்ட் எலக்ட்ரானிக்ஸ், கொமாரபாளையம். | ரூ.13,400/— |

அலுவலக குறிப்பு

1. உத்தேச செலவினம் ரூ.80,000/—க்கு அனுமதி வழங்கலாம்.
2. மேலும், பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருவாளர்கள். குமார் சவுண்ட் சிஸ்டம் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு எண்.15ன் கீழ் அனுமதித்து செலவினத் தொகை ரூ.72,600/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 311 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

கொமாரபாளையம் நகராட்சியில் கடந்த 2014—ஆம் ஆண்டு கட்டப்பட்டு இதுநாள் வரை பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது தினந்தோறும் பொது மக்கள் சுமார் 650 பேர் அம்மா உணவகத்தில் உணவருந்தி வருகின்றனர். மேலும், தற்போது கொரோனா தொற்று காரணமாக ஊரடங்கு அமலில் உள்ளதால், ஏழை எளிய மக்கள் அதிகளவில் உணவருந்த வருகின்றனர். அம்மா உணவகத்தில் உள்ள பாத்திரங்கள், மிக்சி, கிரைண்டர் ஆகிய பொருட்கள் வாங்கப்பட்டு சுமார் 6 வருட காலங்களுக்கு மேலாகிவிட்டதால், ஊரடங்கு காலத்தில் உணவு அருந்த வருபவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் உணவு தயாரித்து வழங்குவதற்கு கீழ்கண்ட பொருட்கள் வாங்கி பயன்பாட்டில் வைக்கவும், தற்போது பழுதடைந்துள்ள Boiler—ஐ சரி செய்து பயன்பாட்டில் வைக்கவும் ஆகும் செலவினம் ரூ.2,10,000/—ஐ நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவி 15ன்கீழ் பணியின் அவசரம் அவசியம் கருதி,

கீழ்காணும் விபரப்படிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினம் வழங்கியதையும் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் / முகவரி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். பெஸ்ட் என்ஜினிரியங், மேட்டூர். | ரூ.2,08,440/– |
| 2. | திருவாளர்கள்.SPP என்டர்பிரைசஸ், மேட்டூர். | ரூ.2,13,355/– |
| 5. | திருவாளர்கள்.நிர்மலா என்ஜினியரிங் ஒர்க்ஸ், மேட்டூர். | ரூ.2,15,620/– |

அலுவலக குறிப்பு

1. உத்தேச செலவினம் ரூ.2,10,000/–க்கு அனுமதி வழங்கலாம்.
2. மேலும், பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருவாளர்கள். பெஸ்ட் என்ஜினிரியங் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு எண்.15ன் கீழ் அனுமதித்து செலவினத் தொகை ரூ.2,08,440/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 312 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, ஏரித்தெரு கழிப்பிடம் வார்டு எண்.7 சத்தியாபுரி பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடம் மற்றும் வார்டு எண்.29 கலைவாணித் தெருவில் அமைந்துள்ள கழிப்பிடத்திற்கு, அக்கழிப்பிடங்களின் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மூழ்கி மின்மோட்டார் இறக்கப்பட்டு தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், வார்டு எண்.9 மத்திய காந்திபுரம் பகுதியில் உள்ள குடிநீரல்லாத தேவைக்கான நீர்தேக்கத் தொட்டியில் தண்ணீர் தொட்டி பழுதடைந்துள்ளதால் அப்பகுதி மக்களின் குடிநீரல்லாத தேவைக்கான தண்ணீர் தடைபட்டுள்ளது. எனவே, கழிப்பிடத்திற்கு செல்லும் பழுதடைந்துள்ள தண்ணீர் விநியோக குழாய்களை மாற்றி தண்ணீர் வசதி செய்யவும், மேற்சொன்ன கழிப்பிடங்களுக்கு தேவைப்படும் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று சின்டெக்ஸ் தொட்டிகள் மற்றும் வார்டு எண்.9 மத்திய காந்திபுரம் பகுதியில் உள்ள குடிநீரல்லாத தேவைக்கான நீர்தேக்கத் தொட்டிக்கு ஒரு சின்டெக்ஸ் தொட்டி மொத்தம் நான்கு சின்டெக்ஸ் தொட்டிகள் கொள்முதல் செய்து, பயன்பாட்டில் வைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,20,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,20,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 313 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 ஆடுவதை செய்யும் கூடம், வார்டு எண்.4 கணபதி நகர், வார்டு எண்.3 வாரச்சந்தை அருகில் உள்ள பெண்கள் கழிப்பிடம், வார்டு எண்.7 சத்தியாபுரி, வார்டு

எண்.11 தினசரி சந்தை கழிப்பிடம் மற்றும் அம்மா உணவகம், வார்டு எண்.14 எல்லைமாரியம்மன் கோவில் வீதி மற்றும் வார்டு எண்.29 கலைவாணித் தெரு ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் கிணற்றுடன் கூடிய நீர்மூழ்கி மின் மோட்டார் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்சொன்ன, இடங்களில் உள்ள கேபிள்கள் நீண்ட நாட்கள் உபயோகத்தின் காரணமாகவும், சாலை மேம்பாட்டுப் பணிகளின் போது சாலையினை தோண்டும் பொழுதும் சேதமடைந்த காரணத்தினால், மோட்டார்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், மேற்சொன்ன இடங்களில் தண்ணீர் ஏற்ற முடியாமல் உப்பு தண்ணீர் விநியோகம் தடைபட்டுள்ளது. எனவே, பழுதடைந்துள்ள கேபிள்களை மாற்றிவிட்டு புதிய கேபிள்களை பொருத்தவும், நீர்மூழ்கி மின்மோட்டார் வாங்கிப் பொருத்தி மீண்டும் மோட்டார்களை இயக்கி தண்ணீர் விநியோகம் செய்ய ஆகும் செலவினம் ரூ.2,65,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,65,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 314 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்.20

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் வழங்க நீரேற்று குழாய்களிலும், பகிர்மான குழாய்களிலும் ஆங்காங்கே Valve–கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆழ்துளைக் கிணறுகளிலும் மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆழ்துளைக் கிணறு அமைந்துள்ள ஒரு சில இடங்களிலும், தொட்டிகள் (Chamber) கட்டாத காரணத்தினால், மண் மற்றும் சிறு கற்களால் அவ்விடம் மூடப்பட்டு வால்வுகளை இயக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, நகரப் பகுதிகளில் வால்வு தொட்டிகள் (Valve Chamber) மற்றும் சிமெண்ட் மூடு கல் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 315 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்.21

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 அய்யம்பாளையம், வார்டு எண்.7 சத்தியாபுரி, வார்டு எண்.14 புதிய எல்லைமாரியம்மன் கோவில் வீதி, வார்டு எண்.19 காட்டுவலவு, வார்டு எண்.26 ஜே.கே.கே.சாலை மற்றும் வார்டு எண்.27 ராஜா வீதி ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு அருகிலேயே மோட்டார் அறையுடன் கூடிய தொட்டி கட்டப்பட்டு பொது மக்களுக்கு குடிநீரல்லாத தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அப்பகுதிவாழ் பொது மக்கள், தங்கள் வீடு அமைந்துள்ள பகுதிகளில் தண்ணீர் குழாய் நீட்டிப்பு செய்து தருமாறு கோரிக்கை அளித்ததையடுத்து, மேற்சொன்ன பகுதிகளில், குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,65,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,65,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 316 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 ராஜராஜன் நகர் 2வது குறுக்கு வீதியில் தற்போது குடிநீர் துணை பகிர்மானக் குழாய் இல்லாத காரணத்தினால் ராஜராஜன் நகர் பிரதான சாலையில் இருந்து வீட்டுக் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக குடிநீர் இணைப்புக் குழாய்கள் மழைநீர் வடிகாலின் குறுக்கே செல்வதால் வடிகாலினை சுத்தம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும், குடிநீர் இணைப்புக் குழாய்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் கழிவுநீர் குடிநீர் குழாய் வழியாக புகுந்து குடிநீர் மாசு ஏற்படும் சூழல் ஏற்படுகிறது. எனவே, ராஜராஜன் நகர் பகுதியில் செல்லும் பகிர்மானக் குழாயிலிருந்து 2வது குறுக்கு வீதிக்கு புதியதாக 90mm HDPE துணை பகிர்மானக் குழாய் பதித்து குடிநீர் விநியோகம் விநியோகம் சீர் செய்வது அவசியம்.

மேலும், வார்டு எண்.19 காட்டுவலவு பழைய பள்ளிபாளையம் சாலையில் தற்போது 110mm HDPE குழாய் மூலம் மேல்காடு பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் இணைப்புகள் தற்போது அதிகரித்ததின் காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது என்று முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் புகார் மனு அளித்துள்ளார். எனவே, 110mm HDPE குழாய்க்கு பதிலாக 160mm HDPE குழாயினை புதியதாக பதித்து குடிநீர் விநியோகம் சீர் செய்வது அவசியம் ஆகும்.

எனவே, மேற்சொன்ன இரண்டு வீதிகளிலும் புதியதாக பகிர்மானக் குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகம் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4,80,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.4,80,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 317 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 மற்றும் 24 சேலம் பிரதான சாலை (இந்தியன் வங்கி முதல் ஐயங்கார் பேக்கரி வரை மற்றும் மதீனா ஸ்டோர் முதல் மேரி ஸ்டோர் வரை), வார்டு எண்.5 வாசுகி நகர் (மத்திய கூட்டுறவு வங்கி சாலை) மற்றும் கம்பன் நகர் மற்றும் வார்டு எண்.10 விட்டலபுரி தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் ஏற்கனவே உள்ள வீட்டுக் குடிநீர் இணைப்புகளை புதிய குடிநீர் பகிர்மானக் குழாய்க்கு மாற்றம் செய்து வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,15,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,15,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 318 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.24</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 ஏரித் தெரு, வார்டு எண்.8 காந்திபுரம் மற்றும் வார்டு எண்.12 பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் ஏற்கனவே உள்ள வீட்டுக் குடிநீர் இணைப்புகளை புதிய குடிநீர் பகிர்மானக் குழாய்க்கு மாற்றம் செய்து வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,95,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,95,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 319 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.25</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 தெற்கு காலனி (பூங்கொடி மில் சாலை) மற்றும் வார்டு எண்.23 உடையார்பேட்டைஆகிய பகுதிகளில் புதியதாக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் ஏற்கனவே உள்ள வீட்டுக் குடிநீர் இணைப்புகளை புதிய குடிநீர் பகிர்மானக் குழாய்க்கு மாற்றம் செய்து வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 320 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.26</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 பெரியார் நகர் (ஆனங்கூர் சாலை சந்திப்பு முதல் ஓடை வரை) தற்போது 110mm PVC குழாய் மூலம் பெரியார் நகர் மற்றும் குறுக்கு வீதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் இணைப்புகள் தற்போது அதிகரித்ததின் காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் மனு அளித்துள்ளார். எனவே, 110mm PVC குழாய்க்கு பதிலாக 160mm PVC குழாயினை புதியதாக பதித்து குடிநீர் விநியோகம் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 321 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.27</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் நீர்தேக்கத் தொட்டிகளில் உள்ள தண்ணீர் குழாய்கள் மற்றும் பொது குடிநீர் குழாய்கள் தொடர்ச்சியான உபயோகத்தின் காரணமாக அடிக்கடி பழுது ஏற்படுகிறது. பழுதான G.I. குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் மற்றும் PVC குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு முறையும் வெளி சந்தைகளில் விலைப்புள்ளிகள் பெற மன்ற அனுமதி அவசியமாகிறது. இதன் காரணமாக பழுதினை சரிசெய்ய காலதாமதம் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு புதியதாக G.I. குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் மற்றும் PVC குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் வாங்கி இருப்பு வைத்துக் கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,45,000/—க்கு கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,45,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 322 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.28</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமாக மணிமேகலைத் தெரு மற்றும் சந்தைப்பேட்டை வளாகத்தில் இரண்டு நுண் உரம் செயலாக்க மையம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் மணிமேகலைத் தெருவில் கட்டப்பட்டுள்ள நுண் உரம் செயலாக்க மையத்திற்கு தேவைப்படும் தண்ணீர், அருகில் உள்ள மயானத்தினுள் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் எடுத்து எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்சொன்ன ஆழ்துளை கிணற்றில் இறக்கப்பட்டுள்ள நீர்மூழ்கி மின் மோட்டார் பழுதானதையடுத்து, தண்ணீர் எடுப்பது நிறுத்தப்பட்டு, நுண் உரம் செயலாக்க மையத்திற்கு தண்ணீர் கொண்டு செல்வது தடைபட்டுள்ளது. மேலும், இந்த ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் குறைவாக உள்ளதால் இந்நீர்மூழ்கி மின்மோட்டாருக்கு பதிலாக புதிய கம்ப்ரசர் மோட்டார் வாங்கவும், அதற்குண்டான உதிரி பாகங்கள், hose—கள், PVC குழாய்கள் வாங்கிப் பொருத்தி நுண் உரம் செயலாக்க மையத்திற்கு தண்ணீர் வசதி செய்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,60,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,60,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 323 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.29</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 சத்தியாபுரி (சரவணா கார் பார்க்கிங் அருகில்) பகுதியில் கைப்பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்போது மேற்சொன்ன கைப்பம்பு பழுதடைந்துள்ளதால், மேற்படி கைப்பம்பினை அகற்றிவிட்டு மேற்சொன்ன ஆழ்துளை கிணற்றில் புதியதாக நீர்மூழ்கி மின்மோட்டார் இறக்கி, அருகிலேயே ஆர்.சி.சி.பில்லர் கட்டி அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத் தொகை ரூ.3,30,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,30,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 324 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.30</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 சத்தியாபுரி சத்துணவு மையம் சாலை பகுதியில் கைப்பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்போது மேற்சொன்ன கைப்பம்பு பழுதடைந்துள்ளதால், மேற்படி கைப்பம்பினை அகற்றிவிட்டு மேற்சொன்ன ஆழ்துளை கிணற்றில் புதியதாக நீர்மூழ்கி மின்மோட்டார் இறக்கி, அருகிலேயே ஆர்.சி.சி.பில்லர் கட்டி அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத் தொகை ரூ.3.30 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3.30 இலட்சத்திற்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 325 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.31</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் TN-34 R-1914-ற்கு ஓட்டுநர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்படாமல் உள்ளதாலும், பொது சுகாதாரப் பிரிவில் தினசரி சேகரம் செய்யும் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணிக்கும் பிற பணிகளுக்கும் JCB வாகனம் தேவைப்படுவதால், மேற்படி வாகனத்தினை இயக்குவதற்கு ஒப்பந்ததாரர் மூலம் JCB வாகன ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒருவரை சப்ளை செய்யும் பணியினை ஆறு மாதத்திற்கு (01.03.2020 முதல் 31.08.2020 வரையிலான காலத்திற்கு) ஒருவரை சப்ளை செய்யும் பணிக்கு தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.24 நாள்.31.01.2020ல் ஒப்புதல் பெறப்பட்டு 28.02.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் திருவாளர்கள்.தீபக் கன்ஸ்ட்ரக்சன்ஸ், என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று 28.02.2020ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது, மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி காலம் 31.08.2020 உடன் முடிவடைகிறது. மேலும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள ஆகும் காலம் 01.09.2020 முதல் 30.09.2020 வரை ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.தீபக் கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்பவரின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளவும், மேலும் ஒரு மாதத்திற்கு மேற்படி ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து கொள்ளவும் அதற்கு ஆகும் செலவினம் ரூ.19,500/—க்கும் அனுமதி வழங்கலாம்.

அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் TN-34 R-1914 இயக்குவதற்கு திருவாளர்கள்.தீபக் கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்பவருக்கு ஒரு மாதம் 01.09.2020 முதல் 30.09.2020 வரை ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திலேயே கால நீட்டிப்பு செய்து பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினம் ரூ.19,500/—க்கும் அனுமதி வழங்கலாம். மேலும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 326 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.32</u>**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் 100 எச்.பி. ( 120 எச்.பி. Stand by மோட்டார் ) மற்றும் ( 50 எச்.பி. Stand by மோட்டார் ) மோட்டார்களைக் கொண்டு நகரில் அமைந்துள்ள 8 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு நாள்தோறும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் 100 எச்.பி. டர்பைன் மோட்டார் பயன்பாட்டில் இருந்த பொழுது திடீரென நின்று விட்டது. பம்பினை கழற்றி பரிசோதித்த பொழுது Pump Bearing, Pump Push, Impeller, Pump neck ring ஆகிய பாகங்கள் பழுதடைந்த நிலையிலும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக 120 எச்.பி. Stand by மோட்டார் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. தொடர்ச்சியாக இயங்குவதன் காரணமாக 120 எச்.பி. டர்பைன் மோட்டாரிலும் ஏதேனும் பழுது ஏற்பட்டால் நகரில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. மேலும் மேற்சொன்ன மோட்டாருக்கான பேனல் போர்டில் பழுதுகள் உள்ளதாலும், இதற்கான Fuse carrier பழுதடைந்துள்ளதாலும், மோட்டார்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே மேற்சொன்ன பழுதுகளை சரிசெய்து பொது மக்களுக்கு குடிநீர் தொடர்ந்து வழங்க ஆகும் செலவினம் ரூ.160000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 இன் கீழ் அனுமதிக்க கீழ்காணும் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும், அதற்காகும் செலவினத்தை வழங்கியதையும் தனி அலுவலரின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.K.தனபாலன், ஈரோடு | 157312/- |
| 2 | M/s. Gokul Engineering works, Bhavani | 157650/– |
| 3 | M/s. Bright Technology, Erode | 157988/– |

அலுவலகக் குறிப்பு

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1 இல் கண்டுள்ள திரு.K.தனபாலன், ஈரோடு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும் சட்டம் 1920 பிரிவு எண். 15 இன் கீழ் மேற்கண்ட ரூ.157312/- செலவினத்தை மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 327 நாள் 31.08.2020
பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.33**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 26.08.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| 1. | பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் பேட்டரி ஆப்பரேட்டட் வாகனத்திற்கு லித்தியம் பேட்டரி சப்ளை செய்யும் பணி. | 3,40,000/– | திருவாளர்கள். பிரியம் இன்டஸ்ட்ரீஸ் அன்ட் இன்ஜினியரிங் (பி) லிட்., | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.18** % குறைவு. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திருவாளர்கள். அருண் இன்டியன் மோட்டார்ஸ். | மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.67 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.38** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். பிரியம் இன்டஸ்ட்ரீஸ் அன்ட் இன்ஜினியரிங் (பி) லிட்., என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.**280** நாள்.**31.07.2020** ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 328 நாள் 31.08.2020

திருவாளர்கள். பிரியம் இன்டஸ்ட்ரீஸ் அன்ட் இன்ஜினியரிங் (பி) லிட்., என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**<u>பொருள் எண்.34</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **26.08.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **<u>குடிநீர் நிதிப் பணிகள்</u>** | | | |
| **1.** | நகராட்சி பராமரிப்பில் உள்ள மினி பவர் பம்ப் ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது பார்த்து பராமரித்தல். | **6,00,000/–** | திரு.கே.தனபாலன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.20 %** குறைவு. |
| | | | திரு. கே.எஸ்.மாரியப்பன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.89 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.20** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.கே.தனபாலன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.**281** நாள்.**31.07.2020** ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 329 நாள் 31.08.2020

திரு.கே.தனபாலன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**<u>பொருள் எண்.35</u>**

பொது சுகாதாரப் பிரிவில் ( Covid-19 ) கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்ய **16.07.2020** அன்று விலைப்புள்ளி கோரியதில் **20.07.2020** அன்று கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | கிருமி நாசினி / பாதுகாப்பு உபகரணம் பெயர் | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி ( All rate incl GST 12 % ) | ஸ்ரீ அக்சயா டிரேடர்ஸ், திருச்சி ( All rate incl GST 12 % ) | ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன், நாமக்கல். (All rate incl GST 12 %) |
|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு பவுடர் ( 20 டன்) | Rs.260000/– | Rs.268800/ - | Rs.246400/– |
| 2 | லைசால் liquid ( 5 % ) (500 லிட்டர்) | Rs.102500 /– | Rs. 106400/– | Rs.98000/– |

| வ. எண் | கிருமி நாசினி / பாதுகாப்பு உபகரணம் பெயர் | ஆர் வி டெக்நாளஜீஸ், ஈரோடு ( All rate incl GST 5 % ) | பியூர் லைப் டெக், ஈரோடு ( All rate incl GST 5 % ) | அபெக்ஸ் அசோசியேட்ஸ், ஈரோடு (All rate incl GST 5 %) |
|---|---|---|---|---|
| 1 | முகவுறை 5700 எண்ணிக்கை | Rs.32918/- | Rs.31122/- | Rs.29925/- |
| 2 | முழுஉடல் பாதுகாப்பு உபகரணம் (PPE Kit) 200 எண்ணிக்கை | Rs.100800/- | Rs.99750/- | Rs.94500/- |

| வ. எண் | கிருமி நாசினி / பாதுகாப்பு உபகரணம் பெயர் | திருச்செங்கோடு அக்ரோ எஞ்ஜினியரிங் சர்வீஸ் கோஆப்ரெட்டிவ் சொசைட்டி லிட் |
|---|---|---|
| 1 | கருப்பு பினாயில், | Rs.65/ Lit |
| 2 | பிளீச்சிங் பவுடர் | Rs.1375/each bag (25 kg) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேசன், நாமக்கல் ; அபெக்ஸ் அசோசியேட்ஸ், ஈரோடு மற்றும் திருச்செங்கோடு அக்ரோ எஞ்ஜினியரிங் சர்வீஸ் கோஆப்ரெட்டிவ் சொசைட்டி லிட் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கவும், அவசர அவசியம் கருதி பொது மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு , ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மேற்படி பொருட்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ. 10,00,000/-க்கு கூட்டப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 330 நாள் 31.08.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.36**

அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் கடிதங்களில் சீனாவில் வூகான் மாகாணத்தில் தோன்றிய கொரோனா வைரஸ் ஆனது அனைத்து இடங்களிலும் பரவுவதால், தற்போது உலக சுகாதார நிறுவனம் உலகளாவிய நோய் ( Pandamic ) என அறிவித்துள்ளதால், காய்ச்சல் தடுககும் பொருட்டு மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், சினிமா தியேட்டர், மால்கள், அனைத்து கல்வி நிறுவனங்கள், அனைத்து அரசு அலுவலகங்களில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் தற்போது இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை

அதிகரித்து வருவதால் நகரின் அனைத்து பகுதிகளிலும் கிருமிநாசினி தெளிக்கவேண்டியுள்ளதால் கிருமி நாசினியான Lysol ( 5 % ) , நீர்த்த சுண்ணாம்பு பவுடர், கருப்பு பினாயில், முகவுறை, கையுறை , பிளீச்சிங் பவுடர் , மற்றும் முழு உடல் பாதுகாப்பு உபகரணம் போன்ற பொருட்களும் தேவைப்படுவதால், மேற்காணும் இனங்களுக்கு தோராயமாக ஆகும் செலவினம் ரூ. 10,00,000 /—க்கு அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் பணிபுரியவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவினம் மேற்கொள்ளவும், ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கும் கூட்டப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.

2. கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய நோய் என அறிவித்து இருப்பதால், அவசர அவசியம் கருதி, பொது மக்களின் சுகாதார நலன் கருதி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணியினை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 331 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.37</u>**

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளுக்கு பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் பரவுதல் குறித்து விழிப்புணர்வு செய்வதற்கு கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வு நோட்டீஸ் பிரிண்ட செய்வதற்கு விலைப்புள்ளி 07.07. 2020 அன்று கோரியதில் 13.07.2020 அன்று கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பிளக்ஸ் / நோட்டீஸ் விபரம் | தமிழன் ஆப்செட் பிரிண்டர்ஸ், எருமப்பட்டி, நாமக்கல் மாவட்டம். | கண்ணன் பிரிண்டர்ஸ், 2/132 A, மெயின் ரோடு, ரெட்டிப்பட்டி , நாமக்கல். | அன்பு ஆப்செட் பிரிண்டர்ஸ், கங்கா நகர்,. துரையூர் மெயின்ரோடு, நாமக்கல். |
|---|---|---|---|---|
| 1 | கொரோனா தடுப்பு விழிப்புணர்வு நோட்டீஸ், A4 size Multicolour Back to Back 30000 No's | ரூ.47250/. | ரூ.62400 | ரூ.56700 |

அலுவலகக் குறிப்பு

மேற்படி குறைவாக விலைப்புள்ளி வழங்கிய தமிழன்ஆப்செட் பிரிண்டர்ச்,எருமப்பட்டி, நாமக்கல் மாவட்டம், என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.மேலும் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் சுகாதாரநலனை கருத்தில் கொண்டு பணிஉத்திரவு வழங்கியமைக்கும் கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 332 நாள் 31.08.2020
தமிழன்ஆப்செட் பிரிண்டர்ச்,எருமப்பட்டி, நாமக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.38</u>**

அரசு செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் கடிதங்களில் சீனாவில் வூகான் மாகாணத்தில் தோன்றிய கொரோனா வைரஸ் ஆனது அனைத்து இடங்களிலும் பரவுவதாலும், தற்போது உலக சுகாதார நிறுவனம் உலகளாவிய நோய் ( Pandamic ) என அறிவித்துள்ளதாலும், இந்நகராட்சி பகுதிகளில் பொது மக்களுக்கு நோய் தொற்று ஏற்படா வண்ணம் கொரோனா வைரஸ் பரவுதல் குறித்து விழிப்புணர்வு நோட்டீஸ் வழங்குவது தேவையாக உள்ளது. எனவே அதற்குண்டான தோராயமாக செலவினம் ரூ.50000/– க்கு அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் பணிபுரியவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செலவினம் மேற்கொள்ளவும், ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கும் கூட்டப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.
2. கொரோனா வைரஸ் நோய் உலகளாவிய நோய் என அறிவித்து இருப்பதால், அவசர அவசியம் கருதி, பொது மக்களின் சுகாதார நலன் கருதி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணியினை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 333 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.39</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் IUDM – 2018 -2019 திட்டத்தின் கீழ் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சாலை பணிகள் மேற்கொள்ள மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணத் தொகை ரூ.72188/- ஐ செலுத்த வேண்டும் என Bright Advertising, Chennai என்ற நிறுவனத்தார் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விளம்பரக் கட்டணத் தொகை ரூ.72188/- ஐ வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 334 நாள் 31.08.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்,
கொமாரபாளையம் நகராட்சி.